<u>சுருக்கம்</u>

மோட்டார் வாகனம் – நாகப்பட்டினம் மாவட்டம், துணை இயக்குநர் மருத்துவப் பணிகள் (காசம்) அவர்களின் வாகனம் டிஎன் 01 ஜி 0859 விபத்து தொடர்பாக இழப்பீடு தொகை வழங்குவது – நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி–1) துறை</u>

அரசாணை (2 பத்தாண்டு) எண்.68 | நாள்: 28. 07. 2014
ஜய – ஆடி 12

திருவள்ளுவர் ஆண்டு 2045

<u>படிக்கப்பட்டது:</u>

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் கடித ந.க.எண்.75355/அந2/1/2007, நாள்: 27.03.2014.

-----

<u>ஆணை:</u>

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்ட துணை இயக்குநர் மருத்துவப் பணிகள் (காசம்) அவர்களின் வாகனம் டிஎன் 01 ஜி 0859 06.09.2004 அன்று திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் போகும் கிழக்கு மெயின்ரோட்டில் பனைமேடு காளியம்மன் கோவில் எதிரில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த சரஸ்வதி மற்றும் செங்கம்மாள் ஆகியோர் மீது மோதியதில் சரஸ்வதிக்கு வலது முன் கையில் சாதாரண காயமும், செங்கம்மாளுக்கு வெளிக்காயத்தையும் ஏற்படுத்தியதால் நஷ்ட ஈடு ரூ.50,000/– வழங்கும்படி நாகப்பட்டினம் மோட்டார் வாகன கோரிக்கை தீர்ப்பாயத்தின் 07.01.2013 அன்று மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்று மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

2. மேலும் திருமதி. சரஸ்வதி மற்றும் திருமதி. செங்கம்மாள் ஆகியோர் தொடர்ந்த வழக்கு எண்கள்.99/2013 மற்றும் 100/2013–ல் இழப்பீடு தொகை ரூ.12,000/–த்தை 7.5% வட்டியுடன் சேர்த்து மனுதாக்கல் செய்த நாளிலிருந்து பைசலாகும் காலம் வரை வழங்க வேண்டும் என்று நாகப்பட்டினம் மாவட்ட மோட்டார் வாகன கோரிக்கை தீர்ப்பாயம் 03.05.2013–ல் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவின்படி நாகப்பட்டினம் மாவட்ட துணை இயக்குநர் மருத்துவப் பணிகள் (காசம்) அவர்களின் வாகனம் டிஎன் 01 ஜி 0859 என்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் விபத்தால் பாதிக்கப்பட்ட திருமதி. சரஸ்வதி

..2.

மற்றும் திருமதி. செங்கம்மாள் ஆகியோா் இழப்பீடு தொகை வழங்குமாறு தொடா்ந்த வழக்கு எண்கள் MCOP No.99/2013 (மற்றும்) 100/2013 என்ற வழக்குகளில் வழங்கப்பட்ட தீா்ப்பில் இழப்பீடு தொகை ரூ.12,000/–த்தை 7.5% வட்டியுடன் சோ்த்து மனுதாக்கல் செய்த நாளிலிருந்து பைசலாகும் காலம் வரை இழப்பீடு தொகை ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளாா்.

4. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அவற்றை ஏற்கலாம் என முடிவு செய்து இவ்விரண்டு வழக்குகள் எண்.99/2013 மற்றும் 100/2013ன் தீா்ப்பின் அடிப்படையில் இழப்பீடு தொகையினை 07.01.2013 முதல் 30.06.2014 வரை ஆண்டிற்கு 7.5% வட்டியுடன் முறையே ரூ.14,429/– (ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று இருபத்தொன்பது மட்டும்) மற்றும் ரூ.14,419/– (ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று பத்தொன்பது மட்டும்) கணக்கிட்டு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநருக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

<u>வழக்கு எண்.99/2013–க்கான வட்டி கணக்கீடு</u>

| | |
|---|---|
| இழப்பீட்டுத் தொகை | ரூ. 12,000/– |
| வருடாந்திர வட்டி விகிதம் | 7.5% |
| 07.01.2013 முதல் 31.01.2013 வரை உள்ள மொத்தக் காலம் | 25 நாட்கள் |
| வட்டி | அசல் x காலம் x வட்டி விகிதம் |
| ஒரு மாதத்திற்கு வட்டி | 12,000x1/12x7.5/100=ரூ.75/– |
| 07.01.2013 முதல் 31.01.2013 வரை 25 நாட்களுக்கான வட்டி | ரூ.75 x25/31=ரூ.60/– |
| 01.02.2013 முதல் 30.06.2014 வரை 17 மாதங்களுக்கான வட்டி | ரூ.75 x17 = ரூ.1,275/– |
| தீா்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை | ரூ.12,000 + 60 + 1,275= ரூ.13,335/– |
| வழக்கறிஞா் கட்டணம் | ரூ. 1,094/– |
| மொத்தம் | ரூ. 14,429/– |

(ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று இருபத்தொன்பது மட்டும்).

<u>வழக்கு எண்.100/2013–க்கான வட்டி கணக்கீடு</u>

| | |
|---|---|
| இழப்பீட்டுத் தொகை | ரூ. 12,000/– |
| வருடாந்திர வட்டி விகிதம் | 7.5% |
| 07.01.2013 முதல் 31.01.2013 வரை உள்ள மொத்தக் காலம் | 25 நாட்கள் |
| வட்டி | அசல் x காலம் x வட்டி விகிதம் |
| ஒரு மாதத்திற்கு வட்டி | 12,000x1/12x7.5/100=ரூ.75/– |
| 07.01.2013 முதல் 31.01.2013 வரை 25 நாட்களுக்கான வட்டி | ரூ.75 x 17 x 25/31=ரூ.60/– |
| 01.02.2013 முதல் 30.06.2014 வரை 17 மாதங்களுக்கான வட்டி | ரூ.75 x17 = ரூ.1,275/– |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை | ரூ.12,000 + 60 + 1,275 = ரூ.13,335/– |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 1,084/– |
| மொத்தம் | ரூ. 14,419/– |

(ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று பத்தொன்பது மட்டும்).

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2210–மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் – 01 – நகர்ப்பகுதி சுகாதாரப்பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I திட்டத்தில் சேராதது – AA மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் – 51 இழப்பீடு –02. ஏனைய இழப்பீடுகள்" (சாட்டியது)
( த.தொ.கு.2210–01–110– AA – 5129)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட நிதி 2014–2015–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடுகளில் அளிக்கப்படும். அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்கள் இச்செலவினத்தை மேற்கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படுகிறார். 2014–2015ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கான கருத்துருவை அனுப்பும்பொழுது இச்செலவினத்தையும் தவறாமல் சேர்த்து உரிய நேரத்தில் நிதித் (சுகாதாரம்–II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.37927/சுகாதாரம்–II/14, நாள் 23.07.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 767 (எழுநூற்று அறுபத்தேழு) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை–6.
இணை இயக்குநர் நலப்பணிகள், நாகப்பட்டினம்.
மாநிலக்கணக்காயர், சென்னை–18/35
மாவட்ட கருவூல அலுவலர், நாகப்பட்டினம்.
நகல்:
உள் (போ. வ ) துறை, சென்னை–9.
நிதி (வ.செ. பொது – II /சுகாதாரம் – II) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / சுத்த நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/07/14

பிரிவு அலுவலர்.

31/7/14